**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 24.02.2026

அசல் வழக்கு எண். 28/2010

வா.சா.1 – கதிரவன் , த/பெ. பெரியசாமி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆதிகேசவ பெருமாள் கோவிலில் நீங்கள் நிர்வாக அலுவலர் என்றால் கூடுதல் நிர்வாக அலுவலராக இருக்கிறேன். இது கூடுதல் பொறுப்பு என்றால் சரிதான். நீங்கள் கோவிந்தவாடி அகரம் கைலாசநாதர் தட்சிணாமூர்த்தி கோயில் செயல் அலுவலர் என்றால் சரிதான். அருள்மிகு லட்சுமி பிரபன்ன ராமானுஜ தாஸ் அறக்கட்டளைக்கு தக்கராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு டிரஸ்ட்யின் தக்கார் என்கிற அடிப்படையில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். எப்பொழுது அவ்வாறு நியமிக்கப்பட்டீர்கள் என்றால் 2007 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டேன் . அதற்கான உத்தரவு இருக்கிறது என்றால் சரிதான். அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். அருள்மிகு லட்சுமி பிரபன்ன ராமானுஜ தாஸ் அறக்கட்டளை என்பது பதிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ட்ரஸ்ட் பதிவு செய்யப்பட வேண்டும் அதற்கு பதிவின் வழங்கப்பட வேண்டும் என்றால் சரிதான். வழக்கில் உள்ள அறக்கட்டளைக்கு பதிவு எண் வழங்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அறக்கட்டளைக்கு அறங்காவலர்கள் தனியாக இருக்கிறார்கள் என்றால் சரிதான். தக்கர் நியமிக்கப்பட்ட பிறகு தான் எனக்கு அது பற்றி தெரியும் டிரஸ்டிகள் இருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. உங்களை

நியமிப்பதற்கு முன்பாக டிரஸ்டிகள் இருந்தார்களா என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது எனக்கு முன்பாக இருந்தவருக்கு தான் தெரியும். 2007 ஆம் ஆண்டுக்கு முன்பாக அதாவது உங்களுக்கு முன்பாக யாராவது தக்கராக நியமிக்கப்பட்டார்களா என்றால் நியமிக்கப்படவில்லை. உங்களை தக்கராக நியமிப்பதற்கு முன்பாக அறங்காவலர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு விசாரணை செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அதுபோன்ற ஆவணங்கள் உங்கள் அலுவலகத்தில் இருக்கிறது என்றால் அவ்வாறு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. அறக்கட்டளை உறுப்பினர்களை விசாரணை செய்யாமல் உங்களை தக்கராக நியமித்து விட்டார்கள் என்றால் சரியில்லை அப்பொழுது இருந்த இணை ஆணையர் விசாரணை நடத்தி இருக்கலாம். வழக்கு சொத்தின் சர்வே எண்.835/1பி/1பி1 கிராம நத்தம் என்றால் தெரியாது. சர்வே எண் மட்டுமே தெரியும். இந்த வழக்கில் அருள்மிகு லட்சுமி பிரபன்ன ராமதாஸ் அறக்கட்டளை சம்பந்தப்பட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் கடந்த 1913 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உயில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. அது உயில் கிடையாது பத்திரம் என்றால் சரிதான். மேற்படி கோயிலுக்கு பழம், பூ அமுது படைக்க வேண்டும் என்று கட்டளையிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சொத்து கோயிலுக்கு ஒப்படைக்கவில்லை என்றால் சரி இல்லை. கட்டளைப்படி செய்யவில்லை என்றால் சொத்து கோயிலுக்கு சொந்தம் ஆகிவிடும் என்று எழுதப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண்.835/1பி/1பி1

கடந்த 1913ஆம் ஆண்டு பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியில்லை. வழக்கு சொத்து சர்வே நம்பர் பத்திரத்தில் குறிப்பிடவில்லை ஆகவே நீங்கள் அந்த பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். வழக்கில் ஏற்கனவே தாக்கல் செய்து இருக்கிறேன் அது குறியிடப்படாமல் இருக்கிறது. ஆதியில் வழக்கு சொத்து யார் பெயரில் இருந்தது வந்தது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. அறக்கட்டளைக்கும் வழக்கு சொத்துக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரி இல்லை. பத்திரத்தில் பழம், பூ கொடுத்து கைங்கரியம் செய்ய வேண்டும் என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி இல்லை சொத்தில் வரும் வருவாயைக் கொண்டு ஆதி கேசவ பெருமாள் கோயிலுக்கு கைங்கரியம் செய்ய வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. பிரபன்ன ராமானுஜ தாஸ் என்பவர் ஸ்ரீ ரங்காச்சாரி சுவாமி, ஸ்ரீ ராமபிரபன்ன சாமி, சுதர்சன சாஸ்திரி, ராகவேந்திர பிரசாத், பகவததாஸ் சுவாமி, கோவர்த்தன தாஸ் ஆகிய ஆறு நபர்களை கைங்கரியம் செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆறு நபர்களை ட்ரஸ்டிகளாக நியமிக்கவில்லை என்றால் சரியில்லை. அது ஒரு டிரஸ்ட் ஆவணம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. டிரஸ்ட் சொத்துக்கு மடாதிபதி நியமிக்கப்படவில்லை என்றால் தெரியாது. கைங்கரியம் செய்வதற்காக மகந்த் நியமிக்கப்படவில்லை என்றால் கட்டளை நிர்வாகிகள் சொத்துக்களை நிர்வாகம் செய்து வருவார்கள். ஆதிகேசவ பெருமாள் பாசியக்கார கோயில் திருக்கோயிலுக்கு அறங்காவலர்கள் இருக்கிறார்கள் என்றால் இருக்கிறார்கள். எத்தனை

அறங்காவலர்கள் இருக்கிறார்கள் என்றால் 2 பேர் இருக்கிறார்கள். எவ்வளவு காலமாக இருக்கிறார்கள் என்றால் பிப்ரவரி 2025 முதல் இருக்கிறார்கள். தற்போதும் இருக்கிறார்கள். அறக்கட்டளை வேறு திருக்கோயில் வேறு என்றால் சரிதான். இரண்டும் தனித்தனியாக இருக்கிறது. திருக்கோயிலுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்ட பட்சத்தில் அவர்கள்தான் பார்த்துக் கொண்டு வருவார்கள் என்றால் செயல் அலுவலர் தான் பார்த்துக்கொண்டு வருவார். அறங்காவலர்களும் சேர்ந்து நிர்வகித்து வருவார்கள். அறங்காவலர்கள் நியமிக்கப்பட்ட பிறகு அவர்கள்தான் நிர்வகித்து வருவார்கள் செயல் அலுவலர்களுக்கு வேலை இல்லை என்று சொன்னால் சரியில்லை. பிரபன்ன ராமானுஜ தாஸ் அறக்கட்டளை சார்பாக கைங்கரியம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். 835 என்று கூறப்படும் சர்வே எண் பெரிய பரப்பளவு கொண்ட கிராம நத்தம் சொத்து என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் பல நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட பட்டா பற்றி நீங்கள் எதுவும் கேள்வி கேட்பதில்லை என்றால் குறிப்பிட்ட சொத்தை மட்டும் தான் நான் பராமரித்து வருகிறேன். சர்வே எண்.835/1பி/1பி1 தனிப்பட்ட நபர் சொத்து என்று சொன்னால் சரி இல்லை. பிரதிவாதிகள் ஒன்று மற்றும் இரண்டு ஆகியோருக்கு இடையில் திருப்பெரும்புதூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பல வழக்குகள் நடைபெற்றது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

**(மேலும் குறுக்கு விசாரணைக்கு வழக்கறிஞரின் வேண்டுக்கோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.